**தலைப்பு 166 – நீர் வழங்கள் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 166 – நீர் வழங்கள் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீர்வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிக்கான அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, இவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நீர்வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிக்கான அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட ரூபா 1.3 மில்லியன் தொகை பெறுமதியான 155 பண்ட அலகுகள் 2023 மார்ச் 15 திகதி அப்புறப்படுத்தல் மற்றும் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்களின் கிரயம் நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டிற்குரிய அகற்றப்பட்ட பண்டங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றுவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்காத ஆனால் நிலையான சொத்துக்கள் என காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 10 மில்லியனுக்கான 03 மோட்டார் வாகனங்கள் 2023 மார்ச் 09 திகதி நகர குடியிருப்புக்கள் அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்களின் கிரயம் நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த 03 வாகனங்களின் கிரயம் நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுருத்தப்பட்டது. | ஏற்பட்டுள்ள கணக்கீட்டு வழுவினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | அமைச்சினால் பயன்படுத்தப்படும் ஏனைய நிறுவனங்களின் பேரில் பதிவு செய்யப்பட்டுள்ள ரூபா 46 மில்லியன் பெறுமதியான 13 வாகனங்கள் அமைச்சின் சொத்துக்கள் என கணக்கீடு செய்திருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் ACA-6 கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 46 மில்லியன் தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | இந்த வாகனங்களை உரித்தாக்குவதற்குரிய தகவல்கள் கொம்டோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அதற்கான அங்கீகாரம் இதுவரை கிடைத்திருக்கவில்லை. அமைச்சிற்கு உரித்தாக்கிய வாகனங்களின் பெறுமதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | உரிமையை உறுதிப்படுத்தாத சொத்துக்களின் பெறுமதியை நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றி சரியான பெறுமதி பதிவு செய்யப்பட வேண்டும். |
| (iv) | முன்னைய இராஜாங்க அமைச்சருக்கு கடமை அலுவல்களுக்காக ரூபா 1.4 மில்லியன் தொகை பெறுமதியான கமெரா உபகரணங்கள், அச்சு இயந்திரம் மற்றும் லெப்டொப் கணினி 2022 மே 09 திகதி நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமையின் மீது அழிக்கப்பட்டிருந்ததுடன், 2024 மே 20 திகதியளவிலும் ஏடுகளிலிருந்து அகற்றுவதற்கு திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்திருக்காமையால் நிதிக் கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 1.4 மில்லியன் தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்களின் பெறுமதி ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு நி.பி. 104 இற்கு இணங்க அங்கீகாரம் திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டியதுடன் அந்த அங்கீகாரத்தை பெற்ற பின்னர் ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்படும் என அறிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணி இருக்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சுக்கு சொந்தமான அனைத்து வாகனங்களினதும் தகவல்கள் அடங்கிய நாளதுவரை ஆக்கப்பட்ட பதிவேடொன்று பேணி இருக்காததுடன் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 2023 ஒக்தோபர் 31 திகதியளவில் செயலாளர், நீர் வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு என்ற பெயரில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த 264 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் மேற்கூறியவாறு ஆவணப்படுத்திருக்கவில்லை. | நீர் வழங்கள் பிரிவிற்காக கூடிய விரையில் உரிய பதிவேடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க வாகனப் பதிவேடொன்று நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்ல வேண்டும். |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களினால் கொள்வனவு செய்து அமைச்சின் பெயரில் பதிவு செய்திருந்த 69 வாகனங்கள் தொடர்பான பதிவு செய்தல் சான்றிதழ் அமைச்சிடம் காணப்படவில்லை. | இந்த 69 வாகனங்களில் 63 வாகனங்களுக்குரிய பதிவு செய்தல் சான்றிதழ் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு மாற்றுவதற்காக MT06 படிவத்துடன் எமக்குக் கிடைத்துள்ளது. மீதியான 06 வானங்கள் தொடர்பாக விரைவாக கண்டறிந்து அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த வாகனங்களின் பதிவு செய்தல் சான்றிதழ் அமைச்சில் வைத்திருப்பதற்கும், அந்த வாகனங்களின் பௌதீக உளமை வருடாந்த பண்டக் கணிப்பீட்டொன்றின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குறைநிரப்பு ஏற்பாடுகள் ஒதுக்கிக் கொள்ளல், நிதிப் பிரமாணம் 74 இற்கு இணங்க முறையான கவனத்துடன் மேற்கொள்ளாமையால் 2023 ஆண்டின் அம்பதலே நீர் வழங்கள் முறைமையை முன்னேற்றுதல் மற்றும் வலுச்சக்தி பாதுகாப்பு செயற்திட்டம் செலவு விடய இலக்கம் 166-02-05-87-2201/11 இன் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த குறைநிரப்பு ஏற்பாடுகளாகிய ரூபா 2,106 மில்லியனுக்கான தொகையில் ரூபா 816 மில்லியன் தொகை பயன்படுத்தியிருக்கவில்லை. | குழாய் பாதைகளை சுத்தப்படுத்தல் மற்றும் தொற்றுநீக்கிகள் மேற்கொள்வதற்காக நீரை இடைநிறுத்துவதற்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தவாறு முடியாமல் போதல், நாட்டில் நிலவிய பொருளாதார பின்னடைவு, நிர்மாண வேலை பண்டங்களின் விலைகள் அதிகரித்தல் மற்றும் தட்டுப்பாடு, சீரற்ற காலநிலை மற்றும் AFD மூலம் நிதியம் வழங்குதல் இடைநிறுத்தப்படல் ஆகிய காரணங்களில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க முறையான கவனத்துடன் செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 50 இற்கு அமைவாக அனைத்து சேவைகளும், மதிப்பீடுகளில் உட்படுத்தப்பட்டுள்ளது என மற்றும் நிதியாண்டினுள் நிறைவேற்றக் கூடியது என முறையான கவனத்துடன் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது என கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டியதுடன், 2023 ஆண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டில் 31 செலவு விடயங்களில் 15 இற்கும் 100 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 20,907 மில்லியனுக்கான சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டது. | அரச செலவுகள் முகாமைத்துவம் மற்றும் செலவுக் கட்டுப்பாடு தொடர்பான சுற்றறிக்கை, சீரற்ற காலநிலை, காணி உரிமை தொடர்பான சிக்கல்கள், பொறியியலாளர் மதிப்பீடுகளை விட டெண்டர் வழங்கப்பட்ட விலைகள் குறைவாக இருத்தல், பண்டங்களின் விலை அதிகரித்தல், சீன அரசிடம் உதவிகள் கிடைக்காமை, புதிய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமை மற்றும் கடன் இடைநிறுத்தப்படல் காரணங்களினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது. | அரச பாதீடு உரிய முறையில் முகாமைத்துவப்படுத்துவற்கு தேவையான உதவி காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அலுவல்களுக்காக ஒதுக்கப்படுகின்ற வருடாந்த ஏற்பாடுகளின் மூலம் அமைச்சர் மற்றும் பதவியணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கான எரிபொருள் செலவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சரின் ஊடகப் பிரிவினால் அமைச்சின் தேக்க வாகனம் பயன்படுத்தப்பட்டு அதற்காக 2023 ஆண்டு கூட்டுத்தொகை ரூபா 1.72 மில்லியன் தொகைக்கான 5,226 லீற்றர் எரிபொருள் செலவு அமைச்சின் நிருவாகச் செலவு செலவுத் தலைப்பின் மூலம் செலவிடப்பட்டிருந்தது. | அமைச்சரின் ஊடகக் குழுவினால் தேக்க வாகனங்கள் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில் வாகனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இனிமேல் நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாவிடின் பணம் மீளளிப்பு செய்வதற்கு அல்லது வாகனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என அறிவிக்கின்றேன். | அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏற்பாட்டுகளின் வரையறை மிகைத்து மேற்கொள்ளப்பட்ட செலவீடுகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காமைச் சந்தர்ப்பங்க் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா. | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| i. நிதிப் பிரமாணம் 103(1)(அ) | - | நீர் வழங்கள் அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டிருந்த மோட்டார் வண்டி 2023 ஒக்தோபர் 22 திகதி விபத்துக்குள்ளாதல் தொடர்பாக அமைச்சின் உத்தியோகத்தர்களை அறிவுருத்தல், 2023 நவம்பர் 15 திகதி அதாவது 03 வாரங்களுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த விபத்து தொடர்பாக 2023 ஒக்தோபர் 22 திகதி அமைச்சின் போக்குவரத்து உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டது என. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. நிதிப் பிரமாணம் 108(3) | ரூபா 13.5 மில்லியன் | 2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பந்தி 2.1 இற்கு இணங்க சேதம் அமைச்சு செயலாளரின் வரையறையை மிகைத்திருந்த போதிலும் அரச நிதித் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது வாகனத்தை விடுவிக்கும் அலுவல்கள் முகவர் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விடயம் முடிவடைந்த பின்னர் இறுதி மதிப்பீடு அரச நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு மதிப்பீட்டுப் பெறுமதி அறுதியாக முகவர் நிலையத்தினால் அனுப்பப்பட வேண்டும். | - மேற்படி - |
| iii. நிதிப் பிரமாணம் 1647(ஆ) | - | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க அமைச்சின் வாகனம் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையாக கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது வாகனக் கணிப்பீடு ஒன்று நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| iv. நிதிப் பிரமாணம் 1646 | - | அமைச்சின் நீர் வழங்கள் பிரிவின் தேக்கத்திற்கு சொந்தமான 16 வாகனங்களுக்குரிய 2023 ஜனவரி முதல் 2023 ஒக்தோபர் வரையான ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | இந்த வாகனங்கள் ஆண்டு பூராகவும் பயன்படுத்தப்பட்டு இருக்காததுடன், திருத்த வேலைகளுக்காக ஈடுபடுத்தல் உத்தியோகத்தர்களுக்கு இணைத்தல் ஆகிய காரணங்களினால் ஓட்ட அட்டவணையில் காணப்பட்டாத மாதங்கள் காணப்பட்டது. | - மேற்படி - |
| v. நிதிப் பிரமாணம் 757(2)(அ) | 659,473 | பண்டக் கணிப்பீட்டின் போது இனங்கண்டிருந்த இராஜாங்க அமைச்சின் மற்றும் அமைச்சின் 03 பிரிவுகளில் பண்டப் பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 திசெம்பர் 31 திகதி வருடாந்த பண்டக் கணிப்பீட்டு அறிக்கை மீது கவனம் செலுத்தி காணப்படுகின்ற வித்தியாசங்களை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றேன். | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2006 ஜூலை 14 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 11/2006 இன் பந்தி 03(ix) | 60,204 | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு முரணாக குறிப்பிட்ட உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மிகைத்து ஓடப்பட்ட கிலோமீற்றர் எண்ணிக்கை 1038 தொடர்பாக எரிபொருள் செலவுக்காக அரச நிதி தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பதவியணி உத்தியோகத்தர் ஒருவரினால் ஆரம்ப விசாரணை நடாத்தப்படுகின்றது. இந்த வாகனம் செயலாளர் அலுவலகத்தின் கடமைகளுக்காக முக்கியத்துவம் அடிப்படையில் வழங்கியிருந்தது. செயலாளரினால் சாட்டப்படும் கடமைகளுக்காக குறிப்பிட்ட வாகனம் பயன்படுத்தப்பட்டு இருந்தமையால் அந்த ஓட்ட அட்டவணைகளுக்காக செயலாளரின் கூட்டிணைப்புச் செயலாளரினால் அவரின் கையொப்பம் இடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 திகதி அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் பந்தி 2.5 | ரூபா 1.5 மில்லியன் | 2022 ஆண்டில் ரூபா 1.4 மில்லியன் பெறுமதியான அலுவலக உபகரணங்களுக்கு ஏற்பட்டிருந்த சேதம் மற்றும் 2023 ஆண்டில் 02 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த ரூபா 97,200 இற்கான நட்டம் தொடர்பாக பொது 284 இன் படி இறுதி அறிக்கை வழங்கியிருக்கவில்லை. | அலுவலக உபகரணங்கள் அழிவடைதல் தொடர்பாக நி.பி. 104(4) விசாரணை அறிக்கை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஏனைய 02 வாகனங்களுக்காக பொது 284 இன் படி அரச நிதித் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2.3 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

### (i) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சுச் செயலாளர் அலுவலகத்தின் ஓட்ட அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டு இருந்த வாகனம் ஒன்றின் மைலோ மீற்றர்களின் படி ஓடிய தூரம் 905 கிலோமீற்றருக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | இது தொடர்பாக பதவியணி உத்தியோகத்தர் ஒருவரின் தலைமையில் ஆரம்ப விசாரணை நடாத்தப்படுவதுடன் ஆரம்ப விசாரணை முடிவடைந்த பின்னர் இந்த விடயம் தொடர்பாக ஏதேனும் முறைகேடுகள் நடைபெற்றிருந்தால் அதற்குரிய நடவடிக்கை முறைகள் கடைபிடிக்கப்படும். | ஓட்ட அட்டவணைப் புத்தகங்கள் நாளதுவரை பேணிச் செல்ல வேண்டியதுடன் முறையான அங்கீகாரம் இன்றி வாகனங்களை பயன்படுத்துதல் தொடர்பாக ஒழுக்காற்று ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவிற்கு உரித்தில்லாத 05 வாகனங்களுக்காக 373 லீற்றர் எரிபொருளும் பெருந்தோட்ட வலயத்திற்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபைக்கு தற்காலிகமாக ஒதுக்கப்பட்ட வாகனம் ஒன்றிற்காக 20 லீற்றர் எரிபொருள் அமைச்சினால் வழங்கியிருந்தது என கண்டறியப்பட்டது. | அமைச்சரின் ஊடகக் கடமைகளுக்காக வழங்கியிருந்த வாகனத்தின் திருத்த வேலை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதற்கு பதிலாக தற்காலிகமாக வாகனம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக இந்த பிரிவின் மூலம் எரிபொருள் வழங்கப்பட்டிருந்து. | அமைச்சின் வாகன பயன்பாடு தொடர்பாக குறிப்பிட்ட சுற்றிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ள வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 571(3) இற்கு இணங்க வைப்புச் செய்யப்பட்ட நாள் முதல் 2 வருடங்களை மிகைத்துள்ள வைப்பக்களை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 6000-0-0-16-0-82 இலக்கங் கொண்ட வைப்புக் கணக்கில் 16 சந்தர்ப்பங்களில் கூட்டுப்பெறுமதி ரூபா 5.05 மில்லியன் தொகை மற்றும் 6000-0-0-13-0-88 இலக்கங் கொண்ட வைப்புக் கணக்கில் பெறுமதி ரூபா 30,000 தொகை தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | இலக்கம் 6000-0-0-16-0-82 கொண்ட வைப்புக் கணக்கில் காணப்படும் தடுத்து வைத்தல் பணத்தை விடுவித்தல் தொடர்பாக நிறுவனத்திற்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டது. இலக்கம் 6000-0-0-13-0-88 வைப்புக் கணக்கில் ரூபா 30,000 விடுவிப்பதற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கும் படி குறிப்பிட்ட நிறுவனத்தை அறிவுருத்தப்பட்டது. | காலவதியாகிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவின் 2023 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் முன்னேற்றத்தை பரிசோதனை செய்த போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் இனங்கண்டிருந்த வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் அலுவல்கள் செயற்படுத்தல் மற்றும் பரிசோதனை அலுவல்களுக்காக அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2 மில்லியனுக்கான ஏற்பாடுகளில் இருந்து பணம் ஏதும் செலவிடப்பட்டிருக்கவில்லை. அதே போல் 200 நலன் பெறுவோருக்காக காணிகள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் காணி உறுதிகள் வழங்கள் 101 நலன்பெறுவோருக்கு அதாவது 50 சதவீதம் ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | வீடுகள் நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகள் ஆண்டின் போது முழுமையாக முடிவடைந்திருந்தமையால் காணி உறுதிகள் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் வீடமைப்பு செயற்திட்ட செலவுகளை தீர்ப்பதற்காக ஈடுபடுத்துவதற்கு நேரிட்டது. இதன் காரணமாக ஆண்டின் போது காணி உறுதிகள் வழங்குதல் குறைந்த மட்டத்திலே காணப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கிய நிகழ்ச்சித் திட்டங்கள் உரிய காலத்தினுள் நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஹட்டனில் அமைந்துள்ள தொழில் பயிற்சி நிலையம் நிர்மாணித்தல் அதற்கு தேவையான உபகரணங்கள் பொருத்துவதற்காக ரூபா 33 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. 2023 ஆண்டு இறுதி வரை எதிர்பார்த்த தொகையை மிகைத்து அதாவது ரூபா 56.11 மில்லியன் தொகை செலவிடப்பட்டு கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்திருந்ததுடன், இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்தல் கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 10 திகதியளவிலும் மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டம் இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் அந்த அலுவலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்த நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படுவதுடன், எங்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுவது உடன்படிக்கையின் பிரகாரம் சுங்கவரி மற்றும் பெறுமதி கூட்டியவரி செலுத்துதல், செயற்திட்டத்திற்கான வசதிகள் வழங்கள் மற்றும் கூட்டிணைத்தல் ஆகும். | செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தேவையான கூட்டிணைப்பு நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 பணிப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குருநாகல் மாவட்டத்தில் கஸுன்கம, நாரம்மல சிசில சமூகம் சார்ந்த அமைப்பில் நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த குழாய் கிணறு பயன்படுத்த முடியாதவாறு கைவிடப்பட்டிருந்தமையால் அதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா ஒரு மில்லியனுக்கான செலவு சிக்கனமற்ற செலவொன்றாகியிருந்தது. | இந்த குழாய் கிணறு தோல்வியடைந்தாலும் நீர் மூலவள சபையினால் குழாய் கிணறு நிர்மாணிக்கும் உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணித்தல் மதிப்பீட்டுத் தொகையில் 75 சதவீதம் அறவிடப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தமையால் இந்த கருமத்திற்காக அமைச்சுக்கு கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | குழாய்க் கிணறு நிர்மாணிப்பதற்காக பொருத்தமான இடம் தெரிவு செய்யும் போது நிலவியல் அளவை ஒன்றின் தேவைப்பாடு காணப்படுவதினால் அந்தக் கருமம் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமையால் அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் இந்த விடயத்தை உரிய முறையில் நிறைவேற்றாத நிறுவனங்கள் அல்லது உத்தியோகத்தர்களினால் தாங்கிக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கேகாலை மாவட்டத்தில் 2016 ஆண்டின் போது மண்சரிவின் போது இடம்பெயர்ந்த கிராமங்களுக்காக நீர் வசதிகள் வழங்கும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 75.2 மில்லியனுக்கான ஹபலக்காவ நீர்வழங்கள் செயற்திட்டத்தின் 06 கருமங்களுக்காக 2023 ஆண்டின் போது ரூபா 19.3 மில்லியனுக்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்தக் கருமங்கள் நிறைவேற்றுவதில் பௌதீக முன்னேற்றம் 10 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | ஹெம்மாத்தகம நீர் வழங்கள் செயற்திட்டத்தின் மூலம் வினியோக குழாய் விரித்தல் ஆரம்பிக்கப்பட்டமையால் இந்த செயற்திட்டத்திற்கு வினியோக குழாய் விரித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது நலன்பெறுவோர்களுக்காக நீர் தொடர்புகள் வழங்குவதற்கு தயார் நிலையில் உள்ளது. இந்த செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நீர்ப் பம்பு தன்தெனிய வத்த நீர் வழங்கள் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும். | இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்து நலன்பெறுவோரின் தேவைப்பாடுகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் மூலம் திட்டமிடப்பட்ட சிறுநீரக நோய்தடுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய சமூக நீர் | குறிப்பிட்ட பில் பத்திரம் சமூகம் சார்ந்த அமைப்பினால் சமர்ப்பிக்கப்படாமையால் நிதி | இந்த நீர்ச் செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கு உரிய |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கள் திணைக்களத்திற்கு கிடைத்திருந்த ரூபா 18.18 மில்லியன் தொகை பெறுமதியான 2 EDR சுத்தகரிப்பு இயந்திரங்கள் 2023 திசெம்பர் 31 திகதியளவில் புத்தளம் மாவட்டத்தில் புளிச்சாங்குளம் நீர்ச் செயற்திட்டத்திற்கு பொறுத்துவதற்காக ரூபா 24.3 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 திகதியளவில் அவ்விடயம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | முன்னேற்றம் பின்னடைவு அடைந்திருந்தது. தற்போது இரண்டு EDR முறைமைகளும் பொறுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு இருப்பதுடன், மின்சார சபையினால் குறிப்பிட்ட ட்ரான்ஸ்போனமர் பொறுத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்ட பின்னர் செயற்படுத்த இயலும். | நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | இந்திய வீடமைப்பு செயற்திட்டம் (கட்டம் 01) கீழ் ரூபா 100 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு 154 வீட்டு அலகுகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 2023 ஆண்டு இறுதியளவில் 16 வீட்டு அலகுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை செயற்படுத்தும் திட்டம் தீர்மானிக்கப்படுவது இந்திய உயர்ஸ்தானிக அலுவகலகத்தின் மூலமாக இருப்பதுடன் தற்போது இந்த 154 வீட்டு அலகுகளில் நிர்மாண வேலைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பது 70 வீட்டு அலகுகளின் வேலைகள் மாத்திரம் என அறிவிக்கின்றேன். | எதிர்பார்த்த பௌதீக இலக்கினை விரைவாக நெருங்குவதற்கு தேவையான கூட்டிணைப்பு அலுவல்கள் அமைச்சினால் மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த 181 வீட்டு அலகுகளுக்காக உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதற்கு ரூபா 25 மில்லியனிற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் வருட இறுதியளவில் அவற்றில் ரூபா 24.77 மில்லியன் தொகை அதாவது 99 சதவீதமும் செலவிடப்பட்டு மொத்தம் 111 வீடுகளுக்கு மாத்திரம் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. | இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படுவது இந்திய உயர்ஸ்தானிக அலுவலகத்தினாலேயாகும். நிர்மாண வேலைகள் முடிவடைந்த பின்னர் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவதுடன் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதில் தாமதம் அடைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | எதிர்பார்த்த பௌதீக இலக்குகளை நெருங்க வேண்டும். |
| (ஈ) | 2023 ஆண்டின் போது 60 ஸ்மார்ட் வகுப்பறைகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 155 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் எதுவித தொகையும் செலவிடப்பட்டிருக்காததுடன், அதற்கு தேவையான பாடசாலைகள் தெரிவு செய்யும் அலுவல்கள் மற்றும் உடன்படிக்கை மேற்கொள்ளும் அலுவல்களும் | கொள்கைகள் மாற்றமடைதல் காரணமாக இந்த செயற்திட்டத்தின் விடயப்பரப்பு மாற்றமடைதல் ஏற்பட்டதுடன் அதன்படி மீண்டும் புரிந்துணர்வு உடன்படிக்கையை திருத்தி அமைப்பதற்கு நேரிட்டது. தற்போது இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு இந்திய அரசின் அங்கீகாரம் | எதிர்பார்த்த பௌதீக இலக்கை நெருங்குவதற்கு தேவையான இணைப்பு அலுவல்கள் உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

**3.4 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவினால் 2017, 2018 மற்றும் 2021 ஆண்டுகளில் போது செயற்படுத்தப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 435.77 மில்லியன் தொகைக்கான 19 வீடமைப்பு செயற்திட்டங்களுக்காக ரூபா 82.12 மில்லியனுக்கான ஆரம்ப முற்பணத் தொகையொன்று மற்றும் முகாமைத்துவக் கட்டணமாக ரூபா 3.6 மில்லியன் தொகையொன்றும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிலையத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த தொகையினை மீளளிப்புச் செய்திருக்கவில்லை. அதே போல் இந்த ஒப்பந்த வேலைக்காக செயலாற்றுகை பாதுகாப்பு முறி ஒன்று பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | செயற்படுத்தப்படாத 19 செயற்திட்டங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த தொகை அரசிற்கு அனுகூலமான முறையில் பெற்றுக் கொள்வதற்கு தேவைப்பட்டமையால் அமைச்சினால் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பிற்கு செலுத்த வேண்டியிருந்த ஏனைய செயற்திட்டங்களின் பில் பத்திரங்களுக்காக பதிலீடு செய்யப்பட்டது என அறிவிக்கின்றேன். | ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உத்தியோகத்தர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். |

**3.5 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மெனிக்கடவர மற்றும் மஹபல்லேகம சமூக நீர்ச் செயற்திட்டங்கள் 2019 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் தேசிய கட்டிட ஆய்வு அமைப்பின் நிலவியல் அளவை அறிக்கையின் படி நிலம் அந்த நிர்மாண வேலைகளுக்காக பொருத்தமற்றது என அறிவித்திருந்த போதிலும் அந்த அறிவுரையின் படி செயற்பட்டிருக்காமையால் காணி மண்சரிவு ஏற்பட்டிருந்த காரணமாக | இதற்காக தேசிய கட்டிட ஆய்வு அமைப்பிலிருந்து மீண்டும் பரிந்துரை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதன் காரணமாக இந்த பரிந்துரை கிடைக்கும் வரை நிர்மாண வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் NBRO அறிக்கைகளின் பரிந்துரைகளின் | முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்றின்றி மற்றும் தேசிய கட்டிடங்கள் ஆய்வு நிறுவனத்தினால் வழங்கியிருந்த பரிந்தரையை கவனத்தில் எடுக்காமல் செயற்திட்டம் ஆரம்பிக்கட்டுள்ளமை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2024 மார்ச் அளவில் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 33 மில்லியன் தொகை விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | படி செயற்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு மற்றும் உரிய சங்க அமைப்புடன் அணுகியிருந்த உடன்படிக்கைக்கு இணங்க 2016, 2017, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 62 வீடமைப்பு செயற்திட்டங்கள் 2023 திசெம்பர் 31 திகதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. எனினும் அந்த செயற்திட்டங்களின் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்துவதற்கு ரூபா 846.85 மில்லியன் தொகை மற்றும் மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ அலுவல்கள் மேற்கொள்வதற்காக ரூபா 51.37 மில்லியனுக்கான தொகை ஒன்று பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பிற்கு அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. | 2016, 2017, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளின் போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த தொடர்வேலை செயற்திட்டங்களுக்காக 2021 ஆண்டிற்காக அமைச்சிற்கு மேலதிக ஏற்பாடொன்று கிடைத்திருக்கவில்லை. 2024 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 500 மில்லியனுக்கான ஏற்பாட்டுத் தொகையினுள் 383 வீட்டு அலகுகளின் மீதியான வேலைகள் ஆரம்பிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | அரச நிதியங்கள் உச்சமட்ட செயற்திறனுடன் மற்றும் ஆக்கத்திறனுடன் பயன்படுத்தக் கூடியவாறு குறிப்பிட்ட ஒப்பந்தங்களை தெரிவு செய்தல் மற்றும அப் பணம் முறையான முகாமைத்துவத்துடன் செலவிடப்படுவதற்காக முறையான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | பசுமை ரன் வீடமைப்புத் திட்டத்திற்காக கண்டிப் பகுதியில் ரொத்சயில்ட் தோட்டத் தொகுதியில் 15 வீட்டு அலகுகளுக்காக ரூபா 3.4 மில்லியன் தொகையும் நுவரஎலிய, ஹட்டன், கண்டி, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளில் 211 வீட்டு அலகுகளுக்காக ரூபா 48.2 மில்லியன் தொகையும், மேலும் 29 வீட்டு அலகுகளுக்காக ரூபா 117.2 மில்லியன் தொகையுமாக ரூபா 168.8 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட வீடுகளின் நிர்மாண அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்காக ரொத்சயில்ட் தோட்டத் தொகுதியில் 15 வீட்டு அலகுகள் உட்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். பாதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தோட்ட வீடுகளில் காணப்பட்ட நிர்மாணவேலைக் கட்டணங்களை அடிப்படையாக கொண்டு அமைச்சிலிருந்து கிடைக்கப்படும் ஏற்பாடுகளின் வரையறையினுள் பூர்த்தி செய்யக் கூடிய வேலை அளவுகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்படுகின்றது. | இந்த வீடமைப்பு செயற்திட்டங்கள் விரைவாக பூர்த்தி செய்து நலன்கள் எதிர்பார்த்திருக்கும் பொது மக்களுக்கு தேவையான சேவையை விரைவாக வழங்க வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஈ) | 2021 ஆண்டின் போது நவஜீவன வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் நுவரெலிய, ஹட்டன், கண்டி மற்றும் கேகாலை பிரதேசங்களில் 157 வீட்டு அலகுகளுக்காக ரூபா 92 மில்லியன் தொகையும் 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது நுவரெலிய, ஹட்டன், கண்டி பிரதேசங்களில் ரூபா 45.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த 104 வீட்டு அலகுகளின் வேலைகளும் கேகாலை மற்றும் ஹட்டன் ஆகிய பிரதேசங்களில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 173 மில்லியனிற்கான 56 வீட்டு அலகுகளின் அலுவல்களும் 2023 திசெம்பர் 31 திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய பொருளாதார நிலைமை மீது கட்டிட நிர்மாணத்திற்கான மூலப் பொருட்கள் விலை தீவிரமாக அதிகரித்த காரணத்தினால் ஒப்பந்தக்காரர்களினால் நிர்மாண வேலைகள் அலுவல்கள் நிறுத்தப்பட்டுள்ளது. பாதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தோட்ட வீடுகள் காணப்பட்ட நிர்மாணவேலைக் கட்டணங்களை அடிப்படையாக கொண்டு அமைச்சிலிருந்து கிடைக்கப்படும் ஏற்பாடுகளின் வரையறையினுள் பூர்த்த்தி செய்யக் கூடிய வேலையின் எண்ணிக்கையை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்படுகின்றது. | தாமதமடைந்த நிர்மாணவேலை அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கேகாலை மாவட்டத்தில் தன்தெனியவத்த கிராமிய நீர்த் திட்டத்தின் நிர்மாணவேலை ஒப்பந்தவேலைகளில் பௌதீக முன்னேற்றம் 10 சதவீதமாக காணப்பட்ட போதிலும் அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபா 3.66 மில்லியன் நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது.<br>பெரோசிமென்ட் தூண் ஒன்று செய்வதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கியிருந்த ரூபா 7.6 மில்லியன் தொகைக்கான ஒப்பந்த வேலையில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னேற்றம் 20 சதவீதமாக காணப்பட்ட போதிலும் ஒப்பந்த வேலை பெறுமதியின் 55 சதவீதமாகிய ரூபா 4.2 மில்லியன் தொகை 2023 திசெம்பர் 29 திகதியளவில் செலுத்தப்பட்டிருந்தது. | துமுமங் கிணற்றின் நிர்மாணவேலைகள் 2024 மே 31 திகதியளவில் பூர்த்தி செய்யவதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது. செலுத்துகை குழாய் மற்றும் வினியோகக் குழாய்கள் விரித்தலின் பௌதீக முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 92 சதவீதமாகக் காணப்பட்டதுடன் தடுத்து வைத்தல் பணமும் பெரோசிமென்ட் தூண் நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்டிருந்த தடுத்து வைத்தல் பணத்தையும் மீண்டும் அமைச்சுக்கு அனுப்புமாறு நீர் வழங்கள் சபைக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது. | அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்களுக்காக ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளல் மற்றும் விடுவித்தல் மாத்திரம் மேற்கொள்ளல் கூடாததுடன் அந்த செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு செயற்படுத்துதல் அமைச்சின் மேற்பார்வை உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதே போல் இந்த செயற்திட்டம் தோல்வியடைவதால் மற்றும் எதிர்பார்த்த முன்னேற்றம் ஒன்றின்றி மிகையாக கொடுப்பனவு செய்தல் செயற்திட்டம் பூர்த்தி செய்யாமல் மற்றும் பிணை பாதுகாப்பு முறி இன்றி தடுத்து வைத்தல் பணம் |

| | | | |
|---|---|---|---|
| | | | விடுவித்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பான உத்தியொகத்தருக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

### 3.7 பெறுகைகள்

அமைச்சின் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் பெறுகை அலுவல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்த பிரிவினால் 2023 ஆண்டிற்காக பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருந்த போதிலும் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2(அ),(ஆ) இற்கு இணங்க விரிவான பெறுகை நேர அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | 2023 ஆண்டு வரை பெறுகைத் திட்டம் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 இன் படி தயாரிக்கப்பட்டதுடன் விரிவாக தயாரிக்கப்படவில்லை. | விரிவான பெறுகை நேர அட்டவணை ஒன்று தயாரித்து அதன்படி உரிய பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொதுநிருவாக சுற்றறிக்கையின் 4.3 மற்றும் 4.4 இற்கு இணங்க, அமைச்சின் வாகனங்களுக்குரிய உள்ளக திருத்த வேலைகள் தொடர்பாக செயற்பட வேண்டியிருந்த போதிலும், உதிரிப் பாகங்கள், பெட்டரி வழங்கள் மற்றும் டயர் வழங்கள் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் ரூபா 10 மில்லியனுக்கான 82 திருத்த வேலைகள் மேற்கொள்ளபட்டு இருந்தது. | தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் அனேகமான வாகனங்கள் 5 வருடங்களை விட பழமையானவையாக காணப்படுவதால் வாகனத் திருத்த வேலைகள் மற்றும் சேவைக்காக முகவர் நிலையம் நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விலை ஒப்பீட்டு முறை ஒன்றிற்காக அனுப்பப்படுவது இயந்திர பொறியியலாளரினால் ஏனைய நிறுவனங்களிலிருந்து கூறுவிலைகள் அழைக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டால் மாத்திரமே. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி விலைகூறல்கள் அழைக்கப்பட்டு முறையான செய்முறை ஒன்றின் படி சிறந்த விலையை தெரிவு செய்வதற்கு தேவையான பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.9.1 படி ரூபா 2 மில்லியனுக்கு குறைவான செயற்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்துவதற்காக சங்கங்கள் | பாதியளவில் பூர்த்தி செய்யப்படடிருந்த தோட்ட வீடுகளின் மீதியான வேலைப் பகுதிகளை பூர்த்தி செய்தல் தொடர்பாக அமைச்சரவை | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளை கடைபிடிக்க வேண்டியதுடன் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை |

| | | |
|---|---|---|
| அமைப்புகளுக்கு ஒப்பந்த வேலைகள் வழங்க முடியும். 2015 முதல் 2023 காலப் பகுதியினுள் செயற்படுத்தப்பட்டிருந்த மேற்கூறிய உச்சமட்ட வரையறையை மிகைத்து மதிப்பீட்டு பெறுமதி ரூபா 5.5 மில்லியனுக்கான 272 வீடமைப்பு செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பினால் அரச பெறுகை வழிகாட்டல் கோவையை கடைபிடிக்காமல் அமைச்சினால் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்புக்கு ரூபா 4000 மில்லியன் தொகை மற்றும் முகாமைத்துவ கட்டணமாக ரூபா 211 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தீர்மானித்தின் படி அரச நிதிச் சுற்றறிக்கை 01/2021 இன் விதிக்கப்பட்டிருந்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 25 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டு தோட்ட ஊழியர் சங்கங்களுக்கு ஒப்பந்த வேலைகளை வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. | பொறுப்பு, தமது பணிப்பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றாமை தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அமைச்சின் CIGAS முறைமையில் அடங்கியிருந்த ரூபா 2.8 மில்லியன் பெறுமதியான 62 ஏனைய இயந்திர உபகரண விடயங்கள் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீட்டின் போது பௌதீக ரீதியாக காணப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் தற்போது இலக்கமிடப்படல் மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படுதல் குறைவடையும். | CIGAS முறைமையில் காணப்படும் நிலையான சொத்துக்களும் பண்டக் கணிப்பீட்டில், பௌதீக ரீதியாக காணப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 21 திகதிய 02/2017 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி 2(i) இற்கு முரணாக வேறு 06 நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 46 தொகை பெறுமதியான 13 வாகனங்கள் மற்றும் நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு சொந்தமான ரூபா 66 மில்லியன் தொகைக்கான 6 வாகனங்களும் 2023 திசெம்பர் 31 திகதியளவிலும் | இந்த 13 வாகனங்களும் அமைச்சின் பெயரில் பதிவு செய்தலை மாற்றுவதற்காக குறிப்பிட்ட தகவல்கள் கொம்டோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பட்டு உள்ளதுடன் அதனை துரிதப்படுத்துவதற்காக இரண்டு சந்தர்ப்பங்களில் நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சின் அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | | |
| (இ) | தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவிற்கு சொந்தமான 5 வாகனங்கள் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகர்த்த மன்றத்திற்கு மற்றும் பெருந்தோட்ட வலயத்திற்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபைக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளதுடன் 09 வாகனங்கள் 2022 ஆண்டின் போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு முறையான சாட்டுதல் ஒன்று இன்றி வழங்கப்பட்டிருந்தது. | சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகர்த்த மன்றம் மற்றும் பெருந்தோட்ட வலயங்களுக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபைக்கு 5 வாகனங்கள் தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு வழங்கியிருந்த 09 வாகனங்களில் 03 வாகனங்கள் இந்த அமைச்சுக்கு வழங்கி மீதியான 06 வாகனங்கள் அந்த அமைச்சுக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டது. | வெளி நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த வாகனங்களை பெற்றுக் கொள்வதற்கு அல்லது முறைப் பிரகாரம் உரித்தாக்கி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.9 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (ii) இல் ஏடுகளிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் இலக்கம் நட்டத்திலிருந்து ரூபா 14,430 பதிவழிக்கப்படாமல் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது என காட்டப்பட்டிருந்த போதிலும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டின் படி அந்த பெறுமதி 2019 நவம்பர் 06 திகதி ஏடுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அதே போல் நட்ட சம்பவங்கள் 02 இற்காக ரூபா 94,576 தொகை நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் பதிவு செய்திருக்கவில்லை. | ரூபா 14,430 தொகை பெறுமதி தவறுதலாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். ரூபா 94,576 இற்கான தொகை தவறுதலாக நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என அறிவிப்பதுடன் பின்னர் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது | .நிதிக் கூற்றுக்களில் சரியான தகவல்கள் உட்படுத்த வேண்டும். |
| (ஆ) | இராஜாங்க அமைச்சு அலுவலகத்திற்கு வழங்கியிருந்த ரூபா 1.4 மில்லியன் பெறுமதியான கமெரா உபகரணங்கள், அச்சு இயந்திரமொன்று மற்றும் மடிகணினி ஒன்று அமைச்சரின் அரசியல் அலுவலகத்திலிருந்து 2022 மே 09 திகதி அழிவுற்றிருந்ததுடன், இந்த | நி.பி. 104(4) இன் கீழ் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை 2023 மே 11 திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்காக தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. 2024 | இந்த நட்டங்கள் தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்காணாமை நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக செயற்படுதல் ஆக காணப்படுவதினால் அது தொடர்பாக உரிய |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரமின்றி அமைச்சு வளாகத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லல் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | ஏப்ரல் 19 திகதி புதிய உத்தியோகத்தர்களினால் செயலாளருக்கு இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நி.பி. 104(4) இற்கு இணங்க திறைசேரிக்கு அறிவிக்கும் படி அறிவிக்கப்பட்டது. இந்த நட்டம் தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர் விசாரணையின் போது இனங்கண்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக அரசுக்கு நட்டமொன்று ஏற்படக் கூடாது. |
| (இ) | 2015 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலப் பகுதியில் அமைச்சுக்கு சொந்தமான 08 வாகனங்களுக்கு 10 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக ரூபா 4.6 மில்லியனுக்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் அந்த நட்டத்தை அறவீடு செய்வதற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 05 திகதி வரை அமைச்சினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 05 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்தத நட்டங்களுக்கு பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 03 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த நட்டத்திற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும், 2 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட நட்டத்தை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | வாகன விபத்துக்களுக்கு ஆளாக்கப்பட்ட வாகனங்களின் நட்டத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு மற்றும் கவனயீனம் காரணமாக அரசுக்கு நட்டம் ஒன்று ஏற்பட்டுள்ளதா என பரிசோதனை மேற்கொண்டு குறிப்பிட்ட பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.10 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ‘அனைவருக்கும் நீர்’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2022 ஆண்டு இறக்குமதி செய்யப்பட்டிருந்த குழாய்கள் மற்றும் துணைக் கருவிகளுடனான 122 கொள்கலன்கள் 2023 மே அளவிலும் துறைமுகத்திலிருந்து விடுவிக்காமல் ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்திருந்தமையால் தாமத்தின் காரணமாக 117 கொள்களன்களுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மற்றும் 05 கொள்களன்களுக்காக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு தாமதக் கட்டணம் என கூட்டுத்தொகை ரூபா 945 மில்லியன் 2023 ஆண்டு விளைவற்று செலவிடப்பட்டிருந்தது. | அனைவருக்கும் நீர் நிகழ்ச்சித் திட்டம் அரச நிதி ஏற்பாடு மீது அரசில் காணப்பட்ட சௌபாக்கியத்தின் தூரநோக்கை அடிப்படையாக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றாகும். எதிர்பார்த்தவாறு கட்டுநிதிகள் கிடைக்காமையால் இந்த குழாய்கள் மற்றும் துணைக் கருவிகள் துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்கு முடியாமல் போனது. | தேவைப்பாடுகளை உரிய முறையில் இனங்கண்டு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் அரசுக்கு ஏற்படக் கூடிய இவ்வாறான நட்டங்களை தவிர்ந்து கொள்வதற்காக குறிப்பிட்ட உத்தியோகத்தர் பொறுப்புடன் செயற்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நீர் வழங்கள் அமைச்சருக்கு இணைக்கப்பட்டிருந்த ஜீப் வண்டி ஒன்று 2023 ஒக்தோபர் 22 திகதி ஏற்பட்ட விபத்தின் காரணமாக மிகவும் சேதமடைந்திருந்தது. எனினும் அந்த வாகனம் கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 10 திகதியளவிலும் திருத்த வேலைகள் மேற்கொண்டு நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 105 இற்கு இணங்க வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை மதிப்பீடு செய்து அதற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒழுக்கத்துக்கு முரணான செயல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது என நி.பி. விசாரணையின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. அதன் காரணமாக ஒழுக்காற்று விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு போதியளவு காரணிகள் காணப்படாததுடன் வீதி விபத்து தொடர்பாக நடைபெறுகின்ற நீதிமன்ற செயற்பாடுகளின் தீர்ப்பின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனத்தை விரைவாக திருத்துவதற்கு மற்றும் விபத்துக்குரிய விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போல் கணக்காய்வு ஐய வினாவின் மூலம் சுட்டிக் காட்டியுள்ள காரணங்கள் தொடர்பாக முறையான விசாரணை மேற்கொள்ளப்படாமை முகாமைத்துவ பலவீனம் என கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாதாந்த வாடகை வருமானத்தில் 10 சதவீதம் கழித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படாமல் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவு நடாத்தப்பட்டு வருகின்ற கட்டிடத்திற்காக குறிப்பிட்ட கட்டிட உரிமையாளருக்கு மாதாந்தம் ரூபா 3 மில்லியன் வீதம் மீளாய்வாண்டின் போது ரூபா 38.4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதில் 2023 திசெம்பர் 31 திகதியளவில் கூட்டுத்தொகை ரூபா 2.6 மில்லியன் தொகையொன்று உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பியிருக்கவில்லை. | இந்த கட்டிடத்தின் உரிமை Naleemiah Institute of Islamic Studies Society நிறுவனத்தினால் அந்த 10 சதவீதமும் உட்படுத்தி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்படுகின்றது என அறிவிக்கப்பட்டமையால் அவ்வாறு கழித்தல் மேற்கொள்ளப்படவில்லை. | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகர்த்த மன்றத்தின் மற்றும் பெருந்தோட்ட வலையத்திற்காக புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர் மூவருக்காக தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவிற்கு சொந்தமான 3 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 7 தேக்க வாகனங்கள் 6 உத்தியோகத்தர்களினால் | இந்த நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்கள் காணப்படாமையால் அந்த நிறுவனங்களின் கருமங்களுக்காக அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களினால் கடமை தேவைப்பாடுகளுக்காக வாகனம் ஒன்று கேட்கும் சந்தர்ப்பத்தில் போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு | முறையான சாட்டுதல் ஒன்று இன்றி அமைச்சுக்கு சொந்தமான வாகனங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்படக் கூடாது. அத்துடன் அவ்வாறு வழங்கப்படுவதன் காரணத்தினால் அரசுக்கு ஏதேனும் நட்டம் ஏற்பட்டிருந்தால் அது தொடர்பாக குறிப்பிட்ட |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயற்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும். |
| (உ) | 2023 ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த 112 வீடமைப்பு செயற்திட்டங்கள் தொடர்பான உடன்படிக்கை மேற்கொண்டிருந்த காலவரையறையுள் பூர்த்தி செய்திருக்காத போதிலும் செயற்திட்ட முகாமைத்துவ கட்டணமாக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்புக்கு கூட்டுத்தொகை ரூபா 107 மில்லியன் தொகையொன்று அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். 2024 ஆண்டிற்கான தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் எண்ணிக்கை ரூபா 500 மில்லியன்களாக காணப்பட்டதுடன் அந்த ஏற்பாட்டுத்தொகையினுள் 383 வீட்டு அலகுகளின் மீதியான வேலைகளை ஆரம்பிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சினால் வீடமைப்பு செயற்திட்டங்களின் நிர்மாணிக்கும் கட்டங்களின் படி முகாமைத்துவக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. | உடன்பட்டிருந்த காலவறையுள் அந்த வீடமைப்பு செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு தேவையான மேற்பார்வை மற்றும் கூட்டிணைப்பு உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | 2016 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த 20 வீடமைப்பு செயற்திட்டங்களின் சாவிகள் ஒப்படைக்கப்பட்ட திகதிகள் காட்டப்பட்டிருக்காதுடன் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை கட்டணமாக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்புக்கு ரூபா 16 மில்லியன் தொகையொன்று அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. அதே போல் 2016 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த 65 வீடமைப்பு செயற்திட்டங்களின் சாவிகள் ஒப்படைக்கப்பட்ட திகதி 06 மாதங்களை விட கூடிய காலம் கடந்திருந்ததுடன் அந்த செயற்திட்டங்களின் முகாமத்துவ கட்டணமாக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பிற்கு ரூபா 61 மில்லியன் எண்ணிக்கை ஒன்று அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் வீடமைப்பு செயற்திட்டங்களில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் நலன்பெறுவோருக்கு சாவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டேன். அமைச்சினால் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்புக்கு வீடமைப்பு செயற்திட்டங்களின் நிர்மாண வேலைக்காக கட்டங்களின் படி முகாமைத்துவக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது, | வீடமைப்பு செயற்திட்டங்களில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் நலன்பெறுவோருக்கு சாவியை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் படி அமைச்சினால் 2023 ஆண்டிற்காக பிரதான நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் 02 இன் கீழ் 04 இலக்காகிய நிகழ்ச்சித் திட்டங்கள் இனங்கண்டிருந்ததுடன் அந்த நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை அடைதல் 3 சதவீதம் முதல் 52 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2023 ஆண்டின் போது தோட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 500 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இந்த ஏற்பாடுகளிலிருந்து பாரிய எண்ணிக்கையான வீடுகள் பூர்த்தி செய்ய முடியாமல் போனது. நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் நீர் வசதிகள் வழங்குவதும் வரையறையாகி இருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களின் இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க உச்ச காலவறை ஆகிய 5 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வேறு சேவை நிலையம் ஒன்றில் கடமையாற்றுவதற்காக இடமளிப்பதற்காக உடனடியாக இடமாற்றம் வழங்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு 46 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இடமாற்ற விண்ணப்பம் இந்த அமைச்சின் மூலம் பரிந்துரைக்கப்பட்டு பொது நிருவாக அமைச்சிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொது நிருவாக அமைச்சினால் இடமாற்றம் வழங்காவிடின் அமைச்சுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு இயலுமை காணப்படவில்லை. மிகவும் அத்தியவசியமான சந்தர்ப்பங்கள் தவிர வருடாந்த இடமாற்றம் வழங்கியிருந்த போதிலும் பதிலாள் ஒருவர் இன்றி பதவியணியினரை விடுவிப்பதற்கு இங்கு காணப்படும் குறைந்த பதவியணி எண்ணிக்கையின் படி முடியாமல் உள்ளது என அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2010 மே 14 திகதிய இலக்கம் சீஏ/1/17/1 கொண்ட அரச செலவின முகாமைத்துவம் தொடர்பான ஜனாதிபதி அலுவலக கடிதத்தின் பந்தி 2.1 இற்கு இணங்க அமைச்சரின் மற்றும் பிரதியமைச்சரின் அலுவலகங்களில் கடமையாற்றுகின்ற தனிப்பட்ட பதவியணியினரின் உச்ச வரையறை 15 ஆக இருக்க வேண்டியிருந்த போதிலும் தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தொழிலாளர் ஒருவர், மானி பதிவுசெய்பவர் மற்றும் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் உட்பட மூன்று உத்தியோகத்தர்கள் அமைச்சரின் கடமை அலுவல்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்தது. | நீர் வழங்கல் சபையின் 2024 மே 06 திகதிய கடிதத்தின் மூலம் ஊடகப் பிரிவு நீர் வழங்கள் சபையின் கீழ் எடுப்பதற்காக இணக்கப்பாடுகள் வருமான உதவியாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் ஆகிய உத்தியோகத்தர் இருவரையும் நீர் வழங்கள் சபைக்கு விடுவிக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது.<br>எதிர்காலத்தில் அதன் படி செயற்பட வேண்டியுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 341 தொகையாக காணப்பட்டதுடன் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த தொழிநுட்ப உத்தியோகத்தர் இருவருடன் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை 319 ஆகக் காணப்பட்டமையால் 22 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 7 பதவிகளும் சிரேஷ்ட மட்டத்தில் காணப்பட்டதுடன் அமைச்சின் அலுவல்களை செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்த நிலைமை தாக்கம் ஒன்றை ஏற்படுத்தக் கூடும் என அவதானிக்கப்பட்டது. | அமைச்சில் தற்போது காணப்படும் அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்பிக் கொள்வதற்காக பொது நிர்வாக அமைச்சுச் செயலாளர் மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரிடம் பல சந்தர்ப்பங்களில் வேண்டப்பட்டது. | வெற்றிடமாகக் காணப்படும் பதவிகளை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |